# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானிய (திருத்தச்) சட்டம்

---

(1998, மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, ஏப்பிறல் மாதம் 3 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 6.50 தபாற் செலவு: ரூபா 2.50

## 1998 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானிய (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ 75/95

## இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

437 ஆம் அத்தியாயத்திற்கான விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள நடுகை மானியச் சட்டத்திற்கான விரிவுப் பெயரானது இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயரானது இடப்படுகின்றது :—

"இறப்பர் தோட்டங்களிலும் இறப்பர் சிறு பற்றுநிலங்களிலும் மீள நடுகை செய்வதற்கும் ; இறப்பர் தோட்டங்களையும் இறப்பர் சிறு பற்றுநிலங்களையும் மறுசீரமைப்புச் செய்வதற்கும் ; கட்டி இயற்கை இறப்பரைப் பதனிடுவதில் பயன்படுத்தப்படும் பொறித்தொகுதி, உபகரணம் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் உட்பட, கட்டி இயற்கை இறப்பரைப் பதனிடுவதற்கும் மானியம் அளிக்கும் இறப்பர் சிறு பற்றுநிலச் சொந்தக் காரர்களுக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக நிதியம் ஒன்றைத் தாபிப்பதற்கும் ; அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, "கட்டி இறப்பரைப் பதனிடுவதில்" என்பதிலிருந்து "கட்டி இறப்பரைப் பதனிடுவதற்கும் மானியம் அளிக்கும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "கட்டி இயற்கை இறப்பரைப் பதனிடுவதில் பயன்படுத்தப்படும் பொறித் தொகுதி, உபகரணம் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் உட்பட, கட்டி இயற்கை இறப்பரைப் பதனிடுவதற்கும் மானியம் அளிக்கும், அத்துடன் இறப்பர் சிறுபற்றுநிலச் சொந்தக்காரர் களுக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்யும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 அ அத்துடன் 2 ஆ என்னும் பிரிவுகளை நீக்குதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ அத்துடன் 2ஆ என்னும் பிரிவுகள் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளை நீக்கம் செய்வதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ), (ஈ) அத்துடன் (உ) என்னும் பந்திகளை முறையே (அ), (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (ஆ) என்னும் பந்தியில் "எல்லா ஏற்றுமதித் தீர்வைகளினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிகளினதும்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ஈ) அவ்வுட்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (இ) என்னும் பந்தியில் அப்பந்தியின் தொடக்கத்திலிருந்து "கொடுக்கப்படக்கூடிய" என்ற சொற்கள் வரையிலான சொற்களுக்குப் பதிலாக, "பாராளுமன்றத்தினால் நிதியத்திற்கெனக் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பந்தியில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "கட்டி இறப்பரைப் பதனிடுவதில் பயன்படுத்தப்படும்" என்பதிலிருந்து "மானியம் அளிக்கும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "கட்டி இயற்கை இறப்பரைப் பதனிடுவதில் பயன்படுத்தப்படும் பொறித்தொகுதி, உபகரணம் என்பவற்றைக் கொள்வனவு செயதல் உட்பட, கட்டி இயற்கை இறப்பரைப் பதனிடுவதற்கும், மானியம் அளிக்கும் அத்துடன் இறப்பர் சிறு பற்றுநிலச் சொந்தக்காரர்களுக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்யும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "விதித்துரைக்கப்பட்ட உதவுதொகைகள் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக்கப்பட்ட உதவுதொகைகள் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அத்தகைய ஊதியம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஊதியம் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(உ) இறப்பர் தோட்டங்களின் மீள நடுகைக்கென இச்சட்டத்தின்கீழ் எவையேனும் மானியக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களல்லாத ஆட்களுக்குத் தள்ளுபடியென்ற வகையில் செலுத்தப்படுவதற்கென ஒழுங்குவிதிகளால் அதிகாரமளிக்கப்பட்டவாறான அத்தகைய தொகைகள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கட்டி இயற்கை இறப்பரின் கிலோகிராம் ஒவ்வொன்றுக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் வரியொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும்." ;

(2) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் அத்துடன் (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்வதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (6) ஆம் அத்துடன் (7) ஆம் உட்பிரிவுகளை முறையே அப்பிரிவின் (2) ஆம் அத்துடன் (3) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (2) ஆம் உட்பிரிவில் "விதிக்கப்படும் ஏற்றுமதித் தீர்வைகளானவை." என்னும் சொற்களுக்குப் பதிலாக "விதிக்கப்படும் வரிகளானவை." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (3) ஆம் உட்பிரிவில் "ஏற்றுமதித் தீர்வைகளின் வரும்படிகள் பிரதான சுங்கச் சேகரிப்பாளரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிகளின் வரும்படிகள் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(6) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் ;

"நிதியத்திற்கு வருமானமளிப்பதற்காக வரியை விதித்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "கட்டி இறப்பரைப் பதனிடுவதில்" என்பதிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "கட்டி இயற்கை இறப்பரைப் பதனிடுவதில் பயன்படுத்தப்படும் பொறித்தொகுதி, உபகரணம் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் உட்பட, கட்டி இயற்கை இறப்பரைக் பதனிடுவதற்கும் மானியம் அளிக்குமொரு திட்டம் அத்துடன், இறப்பர் சிறுபற்று நிலச் சொந்தக்காரர்களுக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "தொகைகளைத் தீர்மானித்தலும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொகைகளைத் தீர்மானித்தலும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஈ) மானியக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாக இல்லாத ஆட்களுக்குத் தள்ளுபடி என்ற வகையில் செலுத்தப்பட வேண்டிய தொகைகளைக் குறித்துரைத்தல் .".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஆயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களிலிருந்து அப் பந்தியின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக் கும் பதிலாக "ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத தொகை கொண்ட குற்றப்பணமொன்றை அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இரு வகையிலொருவகை மறியற்றண்டனையை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டையும் அத்தகைய தவறுக்கான தண்டனை யாகக் குறித்துரைக்கவுஞ் செய்யலாம் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(இ) எவரேனும் ஆளுக்கு அத்தகைய திட்டத்தின்கீழ் மானியம், நடுகைப் பொருட்களின் செலவு, பசளை அல்லது வேறு உள்ளீடுகள் என்ற வகையில் இறப்பர் கட்டுப்பாட்டாளரால் செலுத்தப்பட்ட தொகையானது மீளச் செலுத்தப்படாத்விடத்து அத்தொகையானது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பண மொன்றைப் போன்ற அதே முறையில் அறவிடப்படலாம் என்றும், அத்துடன் எவரே னும் ஆள் மானியத் தவணைக் கொடுப்பனவு களுள் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற் பட்டதைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் சிறு பற்றுநிலத்தைக் கைவிட்டுள்ளார் அத் துடன் அத்தகைய தவணைக் கொடுப்பனவு களை மீளச் செலுத்தவுமில்லை என்ற பயன் பட இறப்பர் கட்டுப்பாட்டாளரால் வழங்கப் பட்ட சான்றிதழொன்று அத்தகைய நிகழ்வின் உள்ளமைக்குச் சான்றாக ஏற்புடையதாதல் வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யலாம் .".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "நிதியம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

' "ஆள்" என்பது ஆட்களின் குழுவொன்றையும் உள்ளடக்கும் ;

"கட்டி இயற்கை இறப்பர்" என்பது 1991 ஒற்றோபர் 1 ஆம் தேதிய 682/16 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 91/11 ஆம் இலக்க சுங்க அறிவித்தலில் (ஆர். பீ. ஓ) எச். எஸ். தலைப்பு 40.01 என்பதன்கீழ் வகுக்கப்பட்ட, எல்லாக் கட்டி இயற்கை இறப்பரும் என்று பொருள்படும் ;'; அத்துடன்

(2) "இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

' "இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்பது இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரான அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட இறப்பர் கட்டுப்பாட்டாளர் என்று பொருள்படும் என்பதுடன், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும் ;'.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.